Registered No M 1229

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

"அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"— திருக்குறள்.

தொகுதி க.	நள வரு வைகாசி மீ 1916 வரு மே மீ	பகுதி ௩.

பொருளடக்கம்.

புதல்வர் கடமை:—	பத்திராதிபர்	89
ஆசிரியரும் மாணாக்கரும்:—	மு. வேங்கடசாமி நாட்டார்	93
கமலாவதி (தமிழ் நாடகம்):—	K. வேங்கடராமையர்	97
வள்ளுவர் நேரிசை:—	அரசஞ் சண்முகனார்	104
சிலேடை வெண்பா:—	கமலாலயன்	106
சாணக்ய சாகஸம் அல்லது சந்திரகுப்த சரித்திரம்:—	வி. பாலம்மாள்	107
ஆத்திசூடி வெண்பா:—	பண்டிதை அசலாம்பிகை அம்மாள்	109
புத்தகம்:—	A.R. ஸ்ரீநிவாச முதலியார்	111
விவேகோதய அபிமானிகளுக்கு ஓர் விக்ஞாபனம்	வி. பாலம்மாள்	114
விநோதக் கூற்று:—	ரா. பாலசுப்பிரமணியன்	115
வாழ்த்துக் கவிகள்:—	ம. கோபாலகிருஷ்ணையர்	116
சமாசாரக் கொத்து:—	பத்திராதிபர்	118
விளம்பரங்கள்:—	ஷை	120

ம. கோபாலகிருஷ்ணையர், வி. பாலம்மாள் } பத்திராதிபர்.

[illegible] விலாஸம் அச்சியந்திரசாலையில்
அச்சிடப்பட்டு

மதுரை புதுமண்டபம் புத்தகவியாபாரி
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனால் வெளியிடப்பட்டது.

வருஷ சந்தா ரூ 1-8-0.] 1916. [தனிப்பிரதி அணா 3.
வெளி நாடுகளுக்கு ரூ 2-4-0.

குறிப்பு:— இதிலடங்கிய விஷயங்களை பத்திராதிபர் அனுமதியின்றி
எவரும் பிரசுரிக்கக் கூ

பட்டு பீதாம்பர கம்பெனி

திருப்தியில்லாததைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.	ஸ்ரீ காசி	பட்டு பீதாம்பரக் காட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள், ஜபமாலைகள் பரிசுத்தமானவை.

108 உள்ள மாலை 1-க்கு 6 அணா முதல் ரூபா 12 வரை விலை அதிகப் படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6 முகக்கண்டிகள் 33 உள்ளது, கண்டி 1-க்கு ரூபா 1 முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது, கண்டி 1-க்கு அணா 10முதல் ரூபா 10வரை. விலை அதிகப்படுவதுபோல், மணிகள் பெரிதாக இருக்கும். சம்மதமில்லாததை திரும்பப்பெற்றுக்கொள்ளப்படும்.

வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் கோயம்முத்தூர் சேலம் வேஷ்டிகள் மாதிரி ஸன்னக்கம்பி ருத்திராக்ஷக்கம்பி ஜரிகைக் கம்பி போட்டவை.

4	முழம்	2	அகலம்	1-க்கு	ரூபா	4-8	முதல்	7	வரை.
6	,,	2½	,,	1-க்கு	,,	7	,,	9	,,
6	,,	3	,,	1-க்கு	,,	10	,,	12	,,
7	,,	2½	,,	1-க்கு	,,	8	,,	12	,,
7	,,	3	,,	1-க்கு	,,	10	,,	14	,,
8	,,	3	,,	1-க்கு	,,	12	,,	18	,,
9	,,	3	,,	1-க்கு	,,	14	,,	20	,,
10	,,	4	,,	1-க்கு	,,	15	,,	22	,,

பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமாக சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்யப்பட்ட உறுதியும், நைஸும், நேர்த்தியுமான கம்பளிப்போர்வைகள், 6 முழநீளம் 3 முழ அகலம். சிவப்பு முதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன உருப்படி 1-க்கு ரூபா 5—8-0. ஷை சிறிது 1-க்கு ரூபா 4-8-0. மேக வர்ணப்போர்வை 1-க்கு ரூபா 6-8—0. தபால் செலவு பிரத்தியேகம்.

காசி வயிரவர் கயிறு.

முதல் நெம்பர் 100-க்கு	...	...	3-0-0
2-வது நெம்பர் 100-க்கு	.		2-0-0
3-வது நெம்பர் 100-க்கு	.	...	1-0-0
4-வது நெம்பர் 100-க்கு	...	...	0-6-0

குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம், கரண்டி முதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும நேர்த்தியும் நைஸும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ரூபா 2, பெரிய செட்டு 1-க்கு ரூபா. 4.

உடனே எழுதுங்கள். விலாஸம்:— மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி, தாராநகர்தெரு, காசி.

Manager, Silk Petamber Co. Dharanagar St. Benares City.

உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று

வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அறிவுடையார், எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—திருக்குறள்.

தொகுதி க.	நள௵ வைகாசிமீ 1916௵ மேமீ	பகுதி ௪.

புதல்வர் கடமை.

(60-ஆம் பக்கத் தொடர்ச்சி)

"ஈசனை வேண்டி, யாரும் இயற்றொணாத் தவங்கள் செய்து,
*பூசுரர்க் கீதலாதிப் புண்ணியச் செயல்கள் ஆற்றி,
§ஏசறச் சூலாய்ப், பற்பல இடரெலாம் தாங்கும் நற்றாய்,
நேசநன் மகனைக் கண்ட நிமிஷமே மகிழ்ச்சி கூர்வள்"

என்ற விஷயத்தைப் பற்றிச் சென்ற சஞ்சிகையில் விரித்துக் கூறினோம். இனி, அந் நற்றாய், தான்வருந்திப் பெற்ற அருமைச் சேயை, அது செயலற்றுக் கிடக்கும் காலம் முதல், அதற்கு விவரம் தெரியும் பருவம் வரை, வளர்த்து வரும்போது காட்டும் பேரன்பையும், அவள் அடையும் கஷ்ட நிஷ்டூரங்களையும், அக்கஷ்ட நிஷ்டூரங்களைக் குழந்தையின் நற்சுகவாழ்வு ஒன்றே கருதிப் பொறுக்கும் மன வலிமையையும் சிறிது யோசித்துப் பாருங்கள்!

பார்க்க விழியும் பறக்க இறகுகளும்
0கூர்த்தறிவும் இல்லாத்தன் குஞ்சுகளைச்—சேர்த்தணைத்துக்
காற்றும் பனியும் கடுவெயிலும் தாக்காதே
போற்றும் சிறகுறுதாய்ப் புள்ளேபோல்—ஆற்றலிலாத்

*பூசுரர்—அந்தணர்; §ஏசு அற—பழிப்பிற் கிடமின்றி.
0கூர்த்தறிவு—கூரியபுத்தி; ,

தன்மைந்தன் அந்தமிலான் தானெனினும் 'காக்கைக்குத்
தன்குஞ்சு பொன்குஞ்'சாம் தன்மையாய்க்—கன்னங்
கரேலென்ன உள்ளவனைக் கட்டழகன் என்னும்
ஒரேஎண்ணத் தோடும் உவந்தும்,—Xபிரேமையுடன்
'பொங்குமுலைப் பாலூட்டிப் பூந்தடங்கண் மையழுதி'
அங்கையினில் ஏந்தி அரவணைத்தும்,—"தங்கமே!
'சாமிஇரு கையாலும் தந்த திரவியமே!'
பூமியெலாம் ஓர்குடைக்கீழ்ப் பொன்னுலகும்—ஏமுற
'ஆளப் பிறந்தவனே! அன்*றவலம் தீர்த்திடவே'
மீளப் பிறந்தகுக வேலவனே!—§கோளற ஓர்
'மைந்தனிலை!' என்ன மயங்கித் தவித்தஎங்கள்
'சிந்தைஅழ லாற்றவந்த சிற்றடி'யே!—கந்தமிகு
'தேனே! மரகதமே!-செல்வத் திரவியபூ
மானே!' சகலகலா வல்லவனே!—ஞானமிகு
கண்மணியே! காதலனே! கற்பகமே! மாசற்ற
ஒண்மணியே!" என்னஉவந் தோதியும்,—உண்மகிழ்ந்து
தாராட்டி நீராட்டித் ㅇதண்அம் புலிகாட்டிப்
பாராட்டித் தங்கப் பணிபூட்டிச்—சீராட்டி
'வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்துநனி காதலித்தும்', —பெட்பால்
'முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே! எனஅழைத்'தும், மைந்தன்—சுகமுறவே
கால்கை அமுக்கிக் கடைவாய் நெரித்து, முலைப்
பால் கலந்த $நெய்பெய்து பாலித்தும்,—மேலே
'குருவி பறவாமற் கோதாட்டி நாளும்
கருதி வளர்த்து,க்கண் காக்கும்—இருஇமைபோல்
ஈயெறும்பும் மொய்க்காமல் இன்புறவே போற்றியும், ஓர்
நோயணுகக் காணிலுளம் ¥நோலாதே—ஆயசில

Xபிரேமை—அன்பு; *அவலம்—துன்பம்; §கோள்அற—குற்றமற; ㅇதண்அம் புலி—குளிர்ச்சியுள்ளசந்திரன். $நெய்—எண்ணெய்; ¥நோலாது—சகியாமல்.

பச்சிலைக்கோ, வேர்க்கோ பலவிடமும் சென்றுசென்று
நச்சி அலைந்து நலிவுற்றும்,—இச்சையிலாப்
பத்தியமும் ஏற்(று)எப் படியா யினுந்தன்சேய்
நித்திய வாழ்(வு) எய்தும் நினைவொன்றே—சித்தமதில்
வைத்துமதை ஆதரிக்கும் வண்மைமிகு நற்றாய்மார்
எத்துணைப்பே ரைக்கண்டு ளோம்!

சிறிது கவனித்துப் பாருங்கள்! தாய் வயிற்றினின்றும் வெளிப்பட்டவுடன் விலங்குகள்கூட, துள்ளிக்குதித்து நடமாடவும், தாமாகவே தாயை அறிந்து பால்குடிக்கவும், ஆரம்பித்து விடுகின்றன.

"பல்ஆவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலை"

என்பது நாம் அனைவரும் கண்கூடாகக் கண்டறிந்த தன்றோ? ஐயறிவுள்ள இம்மிருக சாமர்த்தியமேனும், இனி ஆறறிவுள்ள மனிதனாக இருக்கும் குழந்தைக்கு உண்டோ? இல்லையே! நிராதரவுற்ற இத்தகைய நிலையில் 'அன்பொரு வடிவாய் அமர்ந்திடும் அன்னையின்' ஆதரவொன் றிலையேல், குழந்தையின் கதி என்ன ஆகும்?

தனது ஆருயிரினும் அருமையாகக் காக்கும் இத்தகைய பெருங்கருணை, தாயிடத்திலிருக்கும் காரணத்தாலன்றோ,

"வாய்மையும் அருளும் ஓர்வடி(வு) எடுத்து
வரும் எழில் வாதவூரனுமுன்
தூய்மைசெய் கலைதேர் துறவியர் குலமும்
சுருதியும் சுரர்களும் நாளும்
ஆய்சிவ பரனை 'அன்னை' என்னாமல்
'அன்னை ஒப்பாய்!' என விளித்தான்.
ஆயின்இவ் வுலகில் தாயினும் சிறந்த
ஆருள் வாய்ந்தவர் யாரே?"

சகோதர சகோதரிகளே! பெருங்கருணைத் தடங்கடலாகிய தாய், தன் குழந்தை விஷயமாக இன்னும் என்ன செய்கிறாள் என்பதையும் யோசித்துப் பாருங்கள்! முற்கூறிய வாறெல்லாம் அதனை இரண்டொரு வருஷம் வளர்த்துப் பிறகு, சிறிது சிறிதாகப் பால்குடி மறக்

கடித்துச் சோறுண்ணப் பழக்குகின்றாள். குழந்தை, பராமுகத்தாலும், அதற்கு இயற்கையாய் அமைந்துள்ள குறும்பு முதலிய பல காரணமாகவும், சரிவரச் சோறுண்ணாது 'படுத்தினால்' இத்தாய் செய்யும் யுக்திதான் என்னே! காக்கையைக் கூவியோ, நாயை அழைத்துக் காட்டியோ, அல்லது வேறு போக்குக்களைக் கையாடியோ, உரிய காலங்களி லெல்லாம் உணவூட்டுகின்றாள். இங்ஙனம் அவள் அதனை வளர்த்து, அதனது தந்தையிடம் ஒப்புவித்து, அதனது அறிவு அபிவிருத்தியில் திருப்தி கொள்ளுகின்றாள். "மெய்யன்போடு ஊன உடல் வளர்த்தலில் தாயினும் சிறந்தவர் எவருமிலர்" என்பதை விளக்க, "அன்னை தாயை", "தாயொடு அறுசுவைபோம்" முதலிய தொடர் மொழிகளே போதியவை. இங்ஙனம் ஓர் நற்றாய்,

"மாலைப் பொழுததனில் மஞ்சளரைத் தூக்குளித்து
வேலை மினக்கட்டு விழித்திருந்து—சூலாகிப்
பெற்று வளர்த்துப் பெயரிட்டும், பெற்றபிள்ளை
பித்தானால் என் செய்வாள் பின்?"

என்பதை யோசிப்போம்: அவள் பிரார்த்தித்துக்கொள்ளும் கடவுளர்க்கும், இசைந்து முடியும் பணத்திற்கும், செலுத்தும் காணிக்கைக்கும், நாஸ்திகனே எனத்தக்க தன் நாயகனையும் இச்சேயின் சுக வாழ்வு நிமித்தம் ஆஸ்திகனாக்கி, அவனையும் பல்வேறு விரதம் அனுஷ்டிக்குமாறு செய்யும் வேண்டுகோள்களுக்கும், கணக்குண்டோ? இவ்வளவு கஷ்டங்களும் இருத்தலை உள்ளபடி உணர்ந்து

மதலையைப் பெருநாள் துன்பம்: வளர்த்திடும் நாளும் துன்பம்:
விதலை நோய் அடையிற் றுன்பம்: வியன்பரு வத்திற் றுன்பம்:
கதமுறு காலன் வந்து கைக்கொளின் கணக்கில் துன்பம்:
இதமுறல் எந்நாள் சேயால்? என்றுமே துன்ப மானால்?

என்றும்,

*ஐய! மெய் அம்மணத்தோ(டு) அழுவதை யன்றிப், பேசச்,
செய்ய,ஒன் றறியா நொய்ய சிற்றுடற் சேய் வளர்த்திங்
குய்யவேண் டுவன செய்தே உயிரினும் இனிதாக் காக்கும்
பொய்யில்அன் புடையதாயைப் போல்பவர் உளரோ? நெஞ்சே!

என்றும் கூறிய பெரியோர்களின் கூர்மதி என்னே!

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

---

*ஐய—ஆ! ஆ'!

ஆசிரியரும் மாணாக்கரும்.

முன்னுரை

ஆரிய மனிதப் பிறப்பை யடைந்திருப்பவர்கள் தாம் தாம் பிறந்த தேசத்தானும், பேசும் மொழியானும், பிறவற்றானும், வேறு வேறு கூட்டத்தவராகப் பகுக்கப் படுகின்றனர். அக் கூட்டத்தவருள்ளும், தம் தம் அறிவு தொழில் முதலியவைகளாற் சிறப்பு மேம்பாடுற்று, அவ்வச் சிறப்பிற்கும், அவை நிகழும் அவசரத்திற்கும் தக்கவாறு, பல்வேறு சிறப்புப் பெயர்களால் வழங்கப் படுபவர் உண்டு. பல கலையும் கற்றுணர்ந்தவர்களாய்த் தாம் அறிந்தவைகளைப் பிறரும் அறிந்து பயனெய்துமாறு அருள் சுரந்தூட்டுபவர்கள், "ஆசிரியர்" என்னும் சிறப்புப் பெயர்க்கு உரியராகின்றனர். அவர்கள் தாம் அறிந்தவைகளை நூல் இயற்றுதலானும், உரை எழுதுதலானும், நேரிற் போதித்தலானும், பிறர்க்கு உரிமைப்படுத்தி முறையே 'நூலாசிரியர்', 'உரையாசிரியர்' 'போதகாசிரியர்' என்னும் பெயர்க்கு உரியராகின்றனர். "நூல் உரை போதகாசிரியர் மூவரும்" என்பது இலக்கணக் கொத்து. இவர்களன்றி, உலகில் தீவினை தலையெடுக்குங் காலங்களிற் றோன்றி, அதனை யழித்து, தருமத்தை நிலைநிறுத்து வோர்களும், சமயஸ்தாபனஞ் செய்து ஆன்மஞானம் அல்லது பதிஞானத்தைப் பரவச் செய்வோர்களும், தனித்தனி ஆன்மாக்களின் பரிபாக காலத்தில் வெளிப்பட்டுத் தீக்ஷையானும் உபதேசத்தானும் ஆன்ம சுத்தியையும் ஆன்ம லாபத்தையும் அருளுவோர்களும், கடவுட் டன்மை வாய்ந்த 'ஆசிரிய'ராகின்றனர்.

ஆசிரியர்.

யான், இவ்வுபந் நியாசத்திற்கு, ஆசிரிய ரெனக் கருதியது போதகாசிரியரையே. நெடுங்கணக்கு முதல், பெருங்கலைகள் வரை எப்பாடத்தையும் எவ்வொருவர்க்கேனும், ஒவ்வொரு தொகுதியாருள்ளவர்க்கேனும் போதிப்பவரனைவரும், போதகாசிரியர்களே. இவர்கள் உபாத்தியாயர் என்னும் பெயரால் வழங்கப் பட்டு வரு

கின்றனர். 'ஓதுவித்தற்கண் உதவியா யுள்ளவர்' என்னும் பொருளபடும் 'உப-அத்தியயுனர்' என்னுந் தொடர், சொல்லும் பொருளும் சிறிது திரிந்து, 'உபாத்தியாயர், உவாத்தியார்' எனவழங்குகிறது. பரத கண்டத்தவராகிய நம் முன்னோர்கள், கல்வியே மக்களுக்குக் கண்ணெனக் கருதிப் போற்றி வந்துளார்கள். குழந்தைகட்கு மிக்க இளம்பிராயத்தில் வித்தியாரம்பஞ் செய்வித்தலை, இன்றியமையாத ஓர் சடங்காகவும் நம்மவர் கொண்டிருக்கின்றனரன்றோ! 'இளமையிற்கல்,' 'வித்தைவிரும்பு!' 'எண்ணும் மெழுத்துங் கண்ணெனத்தகும்' என்பனபோல்வன நம்நாட்டு மூதுரைகளாகும். இத்தமிழ் நாட்டில் மிகப் பழங்காலந் தொட்டே சிறு பள்ளிக்கூடங்களும், பெரிய கலாசாலைகளும், கல்விச் சங்கங்களும் இருந்திருக்கின்றன. அக்காலத்தில், உபாத்தியாயர், 'கணக்காயர்' என்னும் பெயரால் வழங்கப்பட்டனர். 'கற்றதூஉமின்றிக் கணக்காயர் பாடத்தால்,' என்பது நாலடியார். சங்கப்புலவர்க்குள் பலராலும் அறியப்படும் பெருமை வாய்ந்த 'நக்கீரனார்'க்குத் தந்தையானவர் மதுரையிலிருந்த ஓர் உபாத்தியாயராயின காரணத்தால், மதுரைக் கணக்காயனார்' என வழங்கப்பட்டார். மணிமேகலைக்காப்பியத்தால் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், காவிரிப்பூம்பட்டினத்தில் வித்தியாமண்டபம் முதலியன இருந்தமை புலனாகின்றது. பாண்டி நாட்டில் ஆயிரக்கணக்கான வருடங்கள் சங்கமிருந்து தமிழைம் வளர்த்தது உலகப்பிரசித்தம். கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் தமது இராமாயணத்தில் கோசல நாட்டை வருணிக்குமிடத்து

"பந்தினையிளையவர் பயிலிடம் மயிலூர்
கந்தனை யனையவர் கலைதெரி கழகம்'

என்று கூறியது, அந்நாட்டிற்கும் பொருந்துவதாயினும், தமிழகத்தின் ஞாபகத்தால் அங்ஙனம் கூறினாரெனக் கொள்ளலும் தவறாகாது. இதனால் தக்க பருவம் வரப்பெற்ற வாலிபர்கள் சிறந்த கலைகளைப் பயின்றுவந்த கலாசாலைகள், இப்பரத பூமியில் அக்காலத்தி லிருந்தமை புலனாகின்றது. பல சொல்லி யென்? அயோத்தியானது, 'கல்வியாகிய ஒரே முளை முளைத்தெழுந்து, கேள்விகளாகிய கவடுகளைப்போக்கி, தவமாகிய சாகந்தழைத்து, அன்பாகிய அரும்பு அரும்பி, தருமமாகிய மலர் மலர்ந்து, போகமாகிய பழம்

பழுத்தது போலும்' என்பரேல், அக்காலத்துக் கல்வியானது எவ்வளவு மகோன்னத நிலையில் இருந்திருத்தல் வேண்டும்?

பழையதமிழ் நூல்களில் முகவுரையாக உபாத்தியாயரியல்பும், அவர் பாடம் போதிக்கும் முறைமையும், மாணுக்கரியல்பும், அவர் பாடங் கேட்கு முறைமையும், விளக்கமுற எழுதப்பட்டு வந்திருக்கின்றன. இந்நான் கிலக்கணமும் சேர்ந்த முகவுரையானது, பொதுப் பாயிரம் எனப்படும். நன்னூலாசிரியர், நூலின் இலக்கணத்தையும் பொதுப்பாயிரத்திற் சேர்த்திருக்கிருர். அவரும், அவர்க்குமுன்னுகப் பின்னுக வுள்ளவர்களும் கூறியிருக்கும் "ஆசிரியர், மாணுக்கரியல்" புகளைப் படிக்குங்கால், எல்லையில்லாத வியப்பும் உவப்பும் நமக்கு உண்டாகும். நன்னூலாசிரியர், 'நற்குடிப் பிறப்பும், சீவகாருண்யமும், கடவுள்வழிபாடும், பலநூல்களையும் கற்றுத்தேர்ந்த அறிவின் றெளிவும், போதனுசக்தியும், உலகியலறிவும் முதலாகிய உயர்குணங்களை உடையனுதலோடு, பொறை முதலியவற்ருல் புவியினையும், உயர்ச்சி முதலியவற்ருல் மலையினையும், நடுநிலை முதலியவற்ருல் நிறை கோலையும், முகமலர்ச்சி முதலியவற்ருல் மலரினையும், ஒத்து விளங்குபவனே ஆசிரியனுவான், என்று கூறுகின்ருர்.

புறத்திணையியலில் 'எட்டுவகை நுதலிய அவையத்தானும்'' என்பதற்கு நச்சினுர்க்கினியர் காட்டியுள்ள ஓர் செய்யுளானது, ஐயனுரிதனுர் கூறிய அவையு மாந்த ரிலக்கணத்தோடும், ஆத்திரேயன் பேராசிரியன் கூறிய ஆசிரிய விலக்கணத்தொடும், கருத்தொருமையுற்று, அழகுபெற உருவகஞ் செய்யப்பட்டு, விளங்குகிறது. அதன் அர்த்தத்தை இங்குக் கூறுகின்றேன். "குடிப்பிறப்பாகிய உடையையுடுத்து, நூலுணர்வாகிய மலரைச்சூடி, நல்லொழுக்கமாகிய அணியைப்பூண்டு, சத்தியமாகிய உணவையுண்டு, தூய்மையாகிய ஆதனத்தமர்ந்து, நடுவுநிலையாகிய நகரிற்றங்கி, அழுக்காறின்மை அவாவின்மை யென்கிற இருபெரு நிதியத்தையும் மேன்மேலும் ஈட்டுகின்ற தோலா நாவினையுடைய மேலோரின் பேரவைக்கண்ஒருநாள் சேர்ந்திருத்தல் கிட்டுமாயின், யான் மகிழ்வுடன் பெறுவேனுக: புலவு நாறுவதாய் நிலையற்றதா யுள்ள யாக்கையுடன் பொருந்தி உலகின் கட் சுழலாநின்ற பிறவியினை."

இவற்ருலெல்லாம் ஆசிரியரென்போர், பண்டமாற்றுச் செய்யும் வாணிகரையும், தாம் பெறும் சம்பளத்திற்கேற்ப வேலை செய்யும் கூலித்தொழிலாளர் அல்லது உத்தியோகஸ்தரையும் போன்றவரல்லரென்பதும், புனித சிந்தையும் புனித வொழுக்கமுமுடையராய்த் தம்மைச் சார்ந்தாரை யெல்லாம் புனிதராக்கி வாழ்விக்கும் பேரருளாளர் என்பதும் விளக்கமாகின்றன.

இனி, ஆசிரியராவார் பன்னூலுங் கற்றறிந்தவராதலோடு உலகத்தோடு பொருந்த நடத்தலினும் வல்லவராதல் வேண்டும். தாம் கற்றுணர்ந்த அரும் பொருள்களைப் பிறர் எளிதினுணருமாறு போதிக்குந் திறனுடையராதல் வேண்டும்; இன்றேல், அவர், கொம்பினிடத்து நன்ருகப் பூத்திருந்தும் மணம் வீசுதலில்லாத புஷ்பத்தினை யொப்பரெனச் சென்னாப்போதார் கூறுகின்ருர். ஆசிரியன், பாடங் கற்பிக்குங்கால் தான் கற்பிக்கப் போகும் விஷயங்களை மனத்திலமைத்துக் கொண்டு, விரையாமலும் வெகுளாமலும் பிரியத்துடனும் முகமலர்ச்சியுடனும் கற்பித்தல் வேண்டும். தம்முடைய தெளிவும் இனிமையும் பொருந்திய குற்றமற்ற சொற்களினுல் மாணுக்கர்களை வசீகரித்து, அவர்களுக்கு மேலும் மேலும் கேட்க வேண்டு மென்னும் ஆர்வத்தையும் மனவெழுச்சியையும் உண்டுபண்ணுதல் ஆசிரியர்க் கின்றியமையாத இலக்கணங்களில் ஒன்று. தமது பேசுந் திறமை யொன்றையே நோக்காது கேட்பாரது நிலைமை யறிந்து சொல்லித் தாம் சொல்லுகின்றவைகளை யேற்றுக் கொள்ளுகின்ருர்களா வெனக் கவனித்தலும், ஏற்றுக் கொள்ளவில்லை யெனத் தெரிந்தால் அதன் காரணத்தை யறிந்து அவர்கள் ஏற்கும் விதத்தால் மீட்டுஞ் சொல்லலும், மாணுக்கர்கள் ஐயுற்று வினவியவைகளுக்கு இனிதின் விடைகூறி ஐயத்தைப் போக்குதலும், ஆசிரியர் கடமையாகும். மாணுக்கர்கள் ஐயுற்று வினவியவைகளுக்கு உத்தரங் கூருமலும், அவர்கள் அவ்வப்பொழுது நேரும் ஐயப்பாட்டினைத் தாராளமாகத் தெரிவித்துக் கொள்ளுதற்கு இடங் கொடாமலும், தமது கோரமான தோற்றத்தாலும் வன்சொல்லாலும் அச்சுறுத்தி அவர்கட்கு ஏலாத தண்டங்களை யெல்லாம் விதித்து அன்னுர்பால் அன்பின்றியே யொழுகுபவர்கள், மாணுக்கர்களின் அறிவு வளர்ச்சிக்குப் பிரதி பந்தகமாக

வந்த பிசாசங்களே யன்றி, ஆசிரியர்களாக மாட்டார்கள். மக்களுக் கியற்கை யறிவானது முற்பிறப்பை யொட்டி யிருத்தலின், இப்பிறப்பின் வயதளவிற் கேற்ப அறிவிருத்தல் வேண்டுமெனும் நியமமில்லை. அம்முறைப்படி மாணாக்கர்கள் ஆசிரியரினும் அறிவு மிக்குடையராய் ஒரோவழித் தமது சாதுரிய அறிவை வெளிப்படுத்தலுங்கூடும்; அங்ஙனமாயின் ஆசிரியராயினோர் அவரது அறிவிற்கு வியந்து மகிழ்ந்து இன்புறுதலே தக்கதாகும்.

ஆசிரியரானவர், குறிப்பிட்ட யாதாமொரு பாடத்தைப் போதிப்பவராக மாத்திரமன்றி மாணாக்கர்களுக்கு உயர்நலமுள்ள பொது வுணர்ச்சியை உண்டுபண்ணி அவரது பொதுநல வாழ்க்கைக்குக் காரணராயிருத்தல் வேண்டும். சுருங்கச் சொல்லின் மாணாக்கர்பால் அன்பும் அநுதாபமு முடையராய் அவரது இக வாழ்வு பரவாழ்வுகளில் தம்மைச் சம்பந்தப் படுத்திக் கொள்வோரே உண்மையான ஆசிரியராவர்.

(இன்னும் வரும்.)

மு. வேங்கடசாமி நாட்டார்.

கமலாவதி.

அங்கம்—1

காட்சி—5.

இடம்—கேகயநாட்டு அரமனையிலோர் முற்றம். காலம்—மாலை.

[விக்கிரமகேது, கமலாவதி இவர்கள் வீற்றிருக்க, ஞானவல்லி ஒருபுறமாக நின்று கொண்டிருக்கிறாள்.]

விக்: என்னம்மா! இன்று ஒருமாதிரியாக இருக்கிறாய்? உன்னைப் பார்த்தால், ஏதோ யோசனையில் ஆழ்ந்தவள்போல் காணப்படுகின்றாயே!

கம. பிதா! தாங்கள் கூறுவது உண்மையே. தங்களிடத்தில் நான் என் மனத்திலுள்ள ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசவேண்டு மென்று பலமுறை யோசித்தேன். ஆயினும்—

விக். குழந்தாய்! என்ன விஷயம்? என்னிடம் அதைச் சொல்வதற் கென்னதடை?

கம. நானோ சிறுகுழந்தை. நான் ஏதேனும் பிதற்றினலும் என் மீது கோபங் கொள்ளாமல், தயவுசெய்து. கேட்பீர்களென்று நம்புகின்றேன்.

விக். குழந்தாய்! நீ சொல்லப்போவது எனக்குத் தெரியும். அடிக்கடி என்னைத் தொந்தரவு செய்வதிற் பயனில்லை. வசந்தசேனரை விடுதலை செய்வதைத் தவிர வேறு விஷயமாக இருந்தால்.சொல். எதுவாக இருந்தபோதிலும் உன் இஷ்டப்படியே நடக்கச் சித்தமாக இருக்கின்றேன்.

கம. பிதா! நான் தங்களை அடிக்கடி தொந்தரவு செய்வதைப் பற்றி மன்னிக்க வேண்டும். தங்களுக்குத் தெரியாதது நான் என்ன சொல்லப் போகின்றேன். தாங்களே நன்றாய் ஆலோசனை செய்து பாருங்கள். ஸ்ரீதரருக்கு இவ்விஷயம் தெரியுமானல் நம்மை லேசாக விட்டுவிடுவாரா? அவரை நினைக்கும் பொழுது— எனக்கு மிகவும் பயமாக இருக்கின்றது, தங்களுக்கு ஏதாவது ஆபத்து நேரிடுமோ வென்று.

ஞான. நாதா! தங்களுக்கு நான் புத்தி சொல்லுவதாக நினைக்கக் கூடாது. இவ்விஷயத்தை நான் தங்களிடத்தில் சொன்னல், எங்கே என்மீது கோபம் கொள்ளுவீர்களோ என்று எனக்குப் பயம். அதனல்தான் சொல்லாமலிருந்தேன். நமது குழந்தை சொல்லியபடியே செய்யுங்கள். நமக்கு ஒரு அபாயமும் ஏற்படாதென்று நான் நினைக்கின்றேன்.

விக். ஸ்ரீதரன் நம்மீது படையெடுக்கா வண்ணம் ஏதாவது ஒரு ஏற்பாடு நான் செய்யாமலிருப்பே னென்று நினைத்தாயோ? முன்யோசனை செய்தே, ஸ்ரீதரன் வந்தால், எனது நண்பனொருவனை உதவி செய்யும்படி கேட்டிருக்கின்றேன்.

ஞான. தாங்கள் அறியாத தொன்று மில்லை. தாரை வாஸிக்குச் சொல்லியது போல் சொல்லுகிறேன். பிறகு தங்களிஷ்டம்.

[ஓர் சேவகன் பிரவேசிக்கிறான்.]

சே. மஹாராஜ்! மாளவநாட்டு இளவரசர் தங்களைப் பாக்க விரும்புறாருங்க. அதெ சமூகத்துலே தெரியப்படுத்தினேன். சீக்கிரம் உத்தரவு குடுக்கணுங்க. அப்படியில்லாட்டி அவ ராகவே இங்கே மஹாராஜாவின் உத்தரவில்லாமல் வந் துடுவாங்க போலிருக்குங்க.

கம். ஹா! ஹா!

ஞான. ஹா! கடவுளே! நீயே காப்பாற்ற வேண்டும், என்னுடைய பிராணநாதருக்கு ஒரு ஆபத்தும் வராமல்.

[ஸ்ரீதரனும் ஜயகேசரியும் பிரவேசிக்கிறார்கள். ஞானவல்லியும் கமலாவதியும் சற்றுத் தூரத் தில் விலகிக் கொள்ளுகிறார்கள்.]

ஸ்ரீ. விக்கிரமகேது அரசே! தமக்கு முன்னாடி அறிவிக்காமல் என் தந்தையை மீட்டுக் கொண்டதற்கும், திடீரென்று இவ் விடத்தில் பிரவேசித்ததற்கும் என்னைத் தாம் மன்னிப்பீ ரென்று நம்புகின்றேன்.

[விக்கிரமகேது பூமியைப் பார்த்த வண் ணம் வீற்றிருக்க, சத்தியானந்தன் பர பரப் புடன் பிரவேசிக்கிறான்.]

விக். ராஜகுமாரா! நானல்லவோ உன்னிடமிருந்து—

[சத்தியானந்தனை நோக்கி ஒருவிதமாகச் சைகை செய்கிறான்.]

ஸ்ரீ. அரசே! மாளவநாட்டில் நான் இல்லாத சமயத்தில் தாம் என் பிதாவைச் சிறை செய்ததற்காகவும், ஜயசேனரைக் கொன்றதற்காகவும், தமக்கு நான் தீங்கு செய்வேனெனக் கருதவேண்டாம். என் போன்ற சிறியோர்கள் ஏதேனும் பிழைகள் செய்த போதிலும், தம்மைப்போன்ற பெரி யோர்கள், நல்வழிப் படுத்த வேண்டியிருக்க, தாமே இப்

படிச்செய்தது தர்மமாகுமா? என் பிதாவோ வயது முதிர்ந்தவர். அவரால் என்னதான் செய்ய முடியும்? தமது வல்லமையை என் போன்ற வாலிபர்களிடத்தில் அல்லவோ காட்டவேண்டும்?

விக். (நடுக்கத்துடன்) ராஜகுமாரா! இப்பொழுது என்ன செய்ய வேண்டுமென்கின்றாய்?

ஜய. அரசே! ஏன் இவ்வளவு பயம்? தமக்கு நாங்கள் ஒரு தீங்கும் செய்யமாட்டோம். இது சத்தியம்.

ஞான. (ஒரு புறமாக) இப்பொழுது தான் என் வயிற்றில் பால் வார்த்தது போல் ஆயிற்று.

கம. [ஒரு புறமாக ஸ்ரீதரன் புன்னகையுடன் தன்னை நோக்கியதால் லஜ்ஜையுடன், பூமியைப் பார்த்துக்கொண்டு தனக்குள்]

ஆஹா! ரூபலாவண்யத்திற் கேற்றாற் போல், அவரிடத்தில் வீரமும் தயாள குணமும் குடி கொண்டிருக்கின்றன! இப்புவியில் இவரைப் போல் ஒருவருமிரார்களென்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன். இருக்கட்டும். இன்னும் என்ன நடக்கிறதென்று கவனிக்கின்றேன்.

[அடிக்கடி ஸ்ரீதரனைப் பார்ப்பதும், லஜ்ஜையுடன் பூமியைப் பார்ப்பதுமாக நிற்கிறாள்.]

ஸ்ரீ. அரசே! என் வருகையைப் பற்றித் தமக்கு முன்னாடி அறிவித்தால், கோழைத்தனமும் குரூரசிந்தையு முள்ளதாம், ஒருக்கால், என் தந்தையின் உயிரை வாங்கினாலும் வாங்கி விடுவீரென்ற எண்ணத்தாலேயே, முன்னதாக என் தந்தையை மீட்டுக்கொண்டு, பிறகு விஷயம் அறிவித்தேன். இப்பொழுது நான் தம்முடன் யுத்தம் செய்யத் தயாராக இருக்கின்றேன். நான் ஜயமுற்றால் என் தந்தையை நாட்டிற்கு அழைத்துச் செல்கிறேன். தாம் ஜயித்தால் எங்களையும் என் தந்தையையும் சிறைப் படுத்திக் கொள்க. அபிப்பிராயம் என்ன? என்ன சொல்லுகிறீர்கள்?

[ஸ்ரீதரன் கமலாவதியை நோக்க, அவள் ஸ்ரீதரனை நோக்க, கமலாவதி புன்னகையுடன் பூமியைத்தன் கால் பெரு விரலாற் கிளறுகிறாள்.]

விக். ராஜகுமாரா! உன் குணம் இப்படிப்பட்டதென்று எனக்கு முன்பே தெரியாமற் போயிற்றே!

[சத்தியானந்தனை நோக்கி ஜாடை செய்கிறான்]

சத். (ஸ்ரீதரனை நோக்கி) அரசே, ஏதோ நாங்கள் அறியாமற் செய்த பிழையைத் தாங்கள் பொறுத்தருளுமாறு வேண்டுகிறோம்.

ஸ்ரீ. விக்ரமகேது ராஜரே! தமது அபிப்பிராயத்தைவெளியிடும். சீக்கிரம்.

விக். என்னுடைய அபிப்பிராய மென்ன இருக்கின்றது? உனது இஷ்டப்படி நடக்க எனக்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை. ராஜகுமாரா! அதிபால்யனாகிய உன்னிடத்தில், வீரம், சாந்தம், ஜீவகாருண்யம், கௌரவ புத்தி முதலிய யாவும் குடிகொண்டிருக்கின்றன. ஆஹா! உள்ளபடியே, உன்னைப்புகழ்வதற்குக் கூட நான் அருகனல்லன்.

ஸ்ரீ. அரசே! பெரியோராகிய தாம், சிறியோனாகிய என்னைப் புகழ்ந்து பேசுவது சரியல்ல. நான் கேட்பதற்கு விடையளியும். என் தந்தையை நான் அழைத்துச் செல்வதற்குத் தங்களுக்கு யாதொரு ஆக்ஷேபமு மில்லையே?

விக். என் ஆக்ஷேபத்தால், பயனென்ன இருக்கின்றது? "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்துவிடல்" என் பதைக் கடைப்பிடித் தொழுகிய வீரசிங்கமே! நீ இனி உன் இஷ்டப்படியே செய்வதில் யாது தடை? ராஜகுமாரா! கழிவிரக்க மேலீட்டால் கலங்கி நிற்கின்றது என் மனம். நீ யாதொரு கவலையும், கஷ்டமுமின்றி நீடூழிவாழுமாறு கடவுள் கிருபை செய்வாராக.

[பெருகும் கண்ணீரைத் துடைத்துக் கொள்ளுகிறான். ஸ்ரீதரனும், ஜயகேசரியும் போகிறார்கள். ஸ்ரீதரன் போகும் பொழுது, கமலாவதியைக் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டே செல்கிறான்]

சத்தியானந்தரே! ஸ்ரீதரன் அதிபால்யனாக இருந்த போதிலும், அவனிடத்தில் எல்லா நற்குணங்களும் குடி கொண்டிருக்கின்றன, பார்த்தீர்களா.?

சத். மஹாராஜா? நான் அப்பொழுதே தங்களிடத்தில் சொன்னேனே, மாளவ நாட்டின் மீதுபடை யெடுக்க வேண்டாமென்று. ஏழை சொல் அம்பலம் ஏறவில்லை.

விக். சரி, நடந்ததைப் பற்றிப் பேசுவானேன்?. நாழிகையாய் விட்டது. ஏன்? நாம் போகலாமே.

சத். ஆமாம். அப்படியே செய்வோம்..

[இருவரும் போகிறார்கள்.]

சூா. (ஒருபுறமாக) கமலாவதி! ஏன் நிற்கிறாய்? நாமும் போகலாம், வா.

கம. அம்மா! நீலாள் இவ்விடத்திற்கு வருவதாகச் சொன்னாள். அவளுடன் நான் வருகின்றேன்.

சூா. அப்படியே செய். எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கின்றது. நான் போகின்றேன். [போகிறாள்.]

கம. [தன் உடையிலிருந்து ஸ்ரீ தரனுடைய படத்தை யெடுத்து]

ஹா! நான் முன் ஜன்மத்தில் என்ன தவம் செய்தேனோ, இம்மஹானுபாவரை நேரில் பார்ப்பதற்கு?. இப்படம் கொஞ்சகாலத்திற்கு முன்வரைந்ததாக இருக்கலாம். ஆஹா! இப்படத்திலிருப்பதைக் காட்டிலும் அவருடைய ரூபம் எவ்வளவு அழகாயிருக்கிறது? என்ன ரூபம்! என்ன ரூபம்! "அகத்தினழகு முகத்தில் தெரியும்" என்ற பழமொழி ஒருபொழுதும் பொய் போகாது. "அவர் வீரபுருஷர்,

களங்கமற்ற நன் மனமுடையவர், இரக்கமே ஓர் உருவெடுத்து வந்தவர்'' என்பதை அவருடைய திருமுகமே கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. ஆஹா! அவர் என்னை அடிக்கடி புன் சிரிப்புடன் நோக்கியதை நினைத்தால், என்னை யறியாமல் எனக்கு ஒருவிதமான ஆனந்தம் உண்டாகின்றது. அம்மஹானுபாவருடைய கிருபையை, நான் அடைவேனேயாகில், என்னைப்போல்,

[நீலாள் பிரவேசிக்கிறாள்.]

நீலா. அடைந்தால், தங்களைப்போல் பாக்கியம் பெற்றவர்களொருவருமில்லை.

கம. (வெட்கத்துடன்) நீலா! நீ இங்குதான் இருந்தாயா என்ன?

நீலா. ஆமாம், அம்மணி! இங்கு நடந்த சங்கதிகள் பூராவும் எனக்குத் தெரியும். (ஓர் திசையைக் காண்பித்து) நான் அங்கு மறைவாக இருந்து பார்த்துக் கொண்டிருந்தேன், ஸ்ரீதரர் வந்ததும், தங்களுடைய தந்தைக்கு அவரால் ஆபத்து விளைந்து விட்டதாகவே நான் நினைத்து விட்டேன். பிறகு போகப் போக வல்லவோ, அவருடைய பெருந் தன்மை விளங்கியது. அம்மணி! சத்துருவினிடம் இரக்கம் காட்டியவர் ஸ்ரீராமபிரான் எனக்கேள்விப் பட்டிருக்கிறேன். ஆயினும் நேரில் இவரையே கண்டேன். உண்மையில் சத்துருக்களிடத்தில் இரக்க முள்ள இத்தகைய வீரபுருஷனை உள்ளபடியே நான் இது வரையில் பார்த்தது மில்லை, கேட்டதுமில்லை. எங்களுக்கு என்ன பயம் தெரியுமா? நல்ல வேளையாய் ஈசுவரனே காப்பாற்றினார்— அம்மணி! ஏன் நாமும் போகலாமே. இனி இங்கு என்னவேலை?

கம. ஆமாம், அம்மாகூட என்னைச் சீக்கிரம் வரும்படியாகச் சொல்லிச் சென்றார்கள். போகலாம், வா.

[இருவரும் போகிறார்கள்]

காட்சி முடிகின்றது.

(இன்னும் வரும்.)

K. வேங்கடராமையர்.

சோழவந்தானூர் அரசஞ் சண்முகனார் இயற்றிய

வள்ளுவர் நேரிசை.

(82-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒன்னார்த் தெறற்கும் உவந்தாரை ஆக்கற்கும்
மன்னுமிரு சான்றுரைப்பீர் வள்ளுவரே!—தன்னுளே
ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி. (௫)

(அ-ம் முதலியன்):—ஒன்னார்-பகைவரை, தெறற்கும்-அழித்தற்கும்; உவந்தாரை-அபிமானித்தவரை, மன்னும் இரு சான்று-தக்க இரண்டு உதாரணங்கள், ஐந்து அவித்தான்-பஞ்சேந்திரியங்களையும் அடக்கியாளும் திறனுடையவன்: கௌதமன்; ஆற்றல்-வலிமைக்கு, சாலும்-போதும், கரி-சாட்சி.

இந்திரன் கரியானமை:—இந்திரன் கௌதமமுனிவரது மனைவி அகலிகையை இச்சித்து அவளை வஞ்சகமாகச் சேர்ந்தான். கௌதமர் இவ்விஷயத்தை ஞானதிருஷ்டியால் அறிந்து, உடல் முழுவதும் பெண்குறியடையுமாறு அவனைச் சபித்தனர். பிறகு அவனது பரிதாப நிலைக்கும் வேண்டுகோளுக்கும் இணங்கியும், அவன் செய்த பெருந்தவறு அவனுக்கு என்றென்றைக்கும் ஞாபகத்தில் இருக்குமாறும், "நின் கண்ணுக்கு மட்டும் அவை பெண்குறிகளாகவும், பிறர்கண்களுக்கு அழகிய கண்களாகவும் விளங்குக" என்று அநுக்ரகித்தனர். இவ்வாறு சாபாநுக்கிரகம் பெற்ற இந்திரன் 1000 கண்ணன் எனப் பேருற்றான்.

ஆறாப் பிழையுமெண்ணா தாயிரங்கண் ஈந்தானோ?
மாறானோ? யார்பெரியர்? வள்ளுவரே!—கூறிற்
செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார். (௬)

(அ-ம் முதலியன்):— ஆறா - பொறுத்தற்கரிய; ஈந்தான் - அளித்த கௌதம ரிஷி, மால்-இந்திரன், செய்கலாதார்-செய்யமுடியாதவர்.

மாலுக்கு ஆயிரங்கண் ஈந்தவரலாற்றை முந்திய செய்யுட்கதை கொண்டு அறிக:

'யானே உலகமெல்லாம் ஆயினேன்' என்றுகண்ணன்
வானறியச் சொற்றதென்கொல்? வள்ளுவரே!—காணிற்
சுவைஒளி ஊ(று)ஓசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு. (௭)

(அ-ம் முதலியன):—கண்ணன்—கிருஷ்ணன், வான்—தேவர், ஊறு—ஸ்பரிசம், ஐந்தின் வகை—ஐந்தின் கூறுபாட்டையும், தெரிவான் கட்டே—ஆராய்வானது அறிவைப் பற்றினதே.

தான் பஞ்சபூத வடிவோடுகூடியவன் என்று ஸ்ரீகிருஷ்ணன் அருச்சுனனுக்குக் கீதோபதேசம் செய்தகாலத்தில் கூறியது அறிக.

பேதைப் பருவம் பிருதையுங் கண்டதென்கொல்
மாதவத்தோன் தன்பெருமை? வள்ளுவரே!—ஓதின்
நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். (அ)

(அ-ம் முதலியன):—பேதைப் பருவம்—கன்னிப் பருவம், பிருதை—குந்திதேவி, மாதவத்தோன்—துர்வாசமுனி, நிறைமொழி மாந்தர்—அருளிக்கூறினும், வெகுண்டு கூறினும், அவ்வப்பயன்களைத் தவறாமல் தரும் வார்த்தைகளையுடைய துறந்தோரது, காட்டி—பயனால் உணர்த்தி.

பிருதை மாதவத்தோன் பெருமை கண்டது:—தேவமீடனுக்கு மாரிஷையிடம் பிறந்த குந்திதேவி, சின்னஞ்சிறுவயதில் துர்வாசமுனிவர்க்கு ஏவல் புரிந்து வருமாறு தந்தையால் கட்டளையிடப்பட்டவள். கோபத்தாலும், கோபத்தால் வரும் சாபத்தாலும் பிரசித்திபெற்ற அம்முனிவரும் மனம்களிக்க, யாதொரு தவறுமின்றி அவள் நடந்து கொண்டமையின், திரிகாலமுமுணர்ந்த அம்முனிவர், அவள் நன்மையைக்கருதி, "தியானித்த மாத்திரத்திலேயே, சில தேவர்கள் அருளால் புத்திரோற்பத்தி பெறத்தக்க சில மந்திரங்களை, உபதேசித்தனர். அம்மந்திரத்தைப் பரிசோதிக்கக் கருதி, அக்கன்னிப் பருவத்திலேயே அவள் சூரியமந்திரம் ஜபிக்க, சூரியனது அருளால் கன்னனைப் பெற்றனள். இதுவே இங்குக் குறிக்கப்பட்ட விஷயமாகும். முழு விவரத்தையும் மகா பாரதத்திற் கண்டறிக.

கோனாக முன்சசிபாற் சென்றோன் குறுகாமே
மானாகம் ஆகியதென்? வள்ளுவரே!—ஆனாக்
குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது. (கூ)

(அ-ம் முதலியன):—கோனாக—தேவேந்திரனது பதவி அடையுமாறு, சசி—இந்திராணி, சென்றோன்—நகுஷன், குறுகாமே—அவளிடம் சமீபியாமலே, மால்நாகம்—பெரிய (மலைப்) பாம்பு, ஆனா—நீங்காத, குணம்—துறவு, மெய்யுணர்வு, அவாவின்மை முதலிய நற்குணங்கள்; நின்றார்—நின்ற

முனிவர்களது, வெகுளி — கோபம், காத்தல் — தடுத்துக் கொள்ளுதல். (சலியாமையும் வெருமையும் பற்றிக் குணங்களைக் குன்றெனக் கூறினார்.)

நகுஷன் நாகமாகியது:—சந்திரவம்சத் துதித்த ஆயுவின் மகனாகிய நகுஷன், 100 அசுவமேத யாகஞ் செய்து இந்திரபதவி எய்தற்குத் தகுதியுள்ளோ னாயினன். சப்தரிஷிகள் சுமக்கும் பல்லக்கிலேறிச் செல்லும்போதே, இவன் காமாதுரனாய் இந்திராணியைச் சேரவிரும்பி, "விரைந்து செல்க" எனப் பொருள்பட "ஸர்ப்ப, ஸர்ப்ப" என்றான். பல்லக்குக் கொம்பு தாங்கி, முன் சென்ற அகஸ்தியர் சினந்து, "நீ ஸர்ப்பமாகுக" எனச் சபிக்க உடனே அவன் பாம்பாயினன்.

☞ முழுவரலாற்றையும் திருவிளையாடற் புராணத்திலும், நகுஷன் சாபம் நீங்கிய விதத்தை மகாபாரதத்திலும் கண்டறிக.

தொற்றச் சடபரதன் செய்யான் குலவினைதான்
மற்றந் தணனாமோ? வள்ளுவரே!—முற்றவே
அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான். (ம)

(அ-ம் முதலியன.) கோற்றம்—வெற்றி, மற்று அந்தணன் ஆமோ?—குலத்திற்குரிய தொழிலைச்) செய்யாதிருந்த காலத்தும், பிராமணன் ஆவனோ?; அறவோர்—துறவறத்தில் நின்றவர்கள், செந்தண்மை—சிறந்த இரக்கம்; பூண்டு ஒழுகல்— கொண்டு நடத்தல்

சடபாதர் வரலாறு:— பரதன் என்னும் அரசன், அரசு முதலியன துறந்து தவஞ்செய்கையில், கங்கையில் மிதந்து தத்தளித்துச் செல்லும் மான் கன்றிற்கு இரங்கி அதைக் காப்பாற்றி வளர்த்து, அக்கன்றைப் பற்றிய கவலையுடன் உயிர் நீத்தமையின், மறு ஜன்மத்தில், மானாகவேபிறந்தனர். மீண்டும் இவர் அந்தணராக உதித்தகாலையில், யாவும் உணர்ந்தும் உணராதார்போல், ஜடனாக நடித்தமையின், ஜடபாதர் என்ற பெயர் இவர்க்கு வாய்ந்தது.

ம. கோ.

சிலேடை வெண்பா.

யானைக்கும் பாம்புக்கும் தம்பூருக்கும் சிலேடை.

நீண்டஉட லோடுளவால் நேர்படமும் கொண்டுளவால்
தீண்டின் விரைந்(து)எழும்பிச் சீறிடலால்—யாண்டுமவை
தந்திரத்தாற் கட்டுணலால், தக்கமணி வாய்ந்துளவால்
தந்தி, பணி தம்பூரே தான்.—கமலாலயன்.

சாணக்ய ஸாகஸம் என்னும்

சந்திரகுப்த சரித்திரம்.

—— o(❋)o ——

(76-ம் பக்கத் தொடர்ச்சி.)

ராக்ஷஸன் கட்டளைப்படியே கடிதம் எழுதப்பட்டன. அக்கடிதங்கட்கு விலாஸமும் முத்திரையுமிட்டுத் தக்க ஆட்களை வரவழைத்து அவர்களை மாறுவேஷங்கொள்ளச் செய்து, "இக்கடிதங்களைப் பர்வதேசனது ஸைநியத்திலிருக்கும் வர்த்தகர்களிடம் கொடுத்து அவர்கள் தரும் பதிலை வாங்கி வாருங்கள்" என்று அனுப்பினான் ராக்ஷஸன்.

அவ்வாட்கள் சென்றதும், ராக்ஷஸன் சமீபத்தில் தியானத்தில் இருந்த சந்யாஸி, சமாதியிலிருந்து விழித்தவன் போல் அபிநயித்துப் "புத்தேச!" என்றான். ராக்ஷஸன் அவனை நோக்கி "ஜபத்திற்கு எற்பாடுகள் செய்து விட்டேன். வெகுநேரம் நிஷ்டையிலிருந்து விட்டீர்கள். பிக்ஷைக்கு நேரமாய்விட்டதே" என்ன, அவனும் அவ்விடம்விட்டுச் சென்றான். சென்றவன் ஒர் மறைவிடத்திருந்து, ராக்ஷஸன் செய்த எற்பாடுகள் யாவையும் விவரமாக ஒர் கடிதத்தில் எழுதி, அக்கடிதத்தைத் தனது அந்தரங்க சிஷ்யனான வேகசர்மனிடம் தந்து, "நீ அதிவிரைவிற் சென்று, சாணக்யரிடம் இக்கடிதத்தைக்கொடு. பிறகு அவர்சொல்லுகிறபடி நடந்துகொள்" என்றான். வேகசர்மன் வெகுவிரைவிற் செல்லக்கூடிய குதிரையேறிக் குறுக்கு வழியாகச் சாணக்யனிடம் புறப்பட்டான்.

இங்ஙன மிருக்க, ராக்ஷஸன், பாகுராயணன் முதலியோரை வரவழைத்துஅவர்களுக்கு ராஜபக்தி தேசபக்தி அதிகரிக்குமாறு பேசித் தக்க சம்மானங்கள் செய்து, வெவ்வேறு விதங்களில் நகரைக்காக்கவும் பர்வதேசனது ஸைநியங்களை எதிர்க்கவும் உபாயங்கூறிப் படைகளைப் பலபிரிவுகளாக வகுத்துத் தக்கவீரர்களை அவற்றிற்குத் தலைவர்களாக்கினான். உடனே நந்தர்சேனை நாலு இடங்களிலும் வியாபிக்க ஆரம்பித்தது. நிற்க.

வேகசர்மன் சாணக்யனிடம் ஜீவஸித்தி தந்த கடிதத்தைக் கொடுத்தான். சாணக்யன் அதனைப்படித்ததும், பர்வதேசனது ஸேநாதிபதியான சேகரனை வரவழைத்து, "சத்துருக்களிடமிருந்து மாறுவேஷத்துடன் சிலர் கடிதங்களுடனே வருகின்றனர். அவர்களை உபாயமாகக் கண்டுபிடிக்க எற்பாடு செய்" என்று கூறிப் பர்வதேசனிடம் சென்று சேகரனுக்குத் தான் இட்டகட்டளையை அறிவித்து ராக்ஷஸனது சதியாலோசனையையும் கூறிக்கொண்டிருந்தான்.

இதற்குள் பரதேசி வேஷத்துடன் இருந்த ஒருவனை, கந்தை மூட்டையுடன் சேகரனது ஆட்கள் சிலர் பிடித்து வந்து பர்வதேசன் முன் நிறுத்தினர். அவனது கந்தையில், குலூத, காச்மீர, தேசாதிபதிகளிடமிருக்கும் கூட மந்திரிகளுக்கு ராக்ஷஸன் எழுதிய கடிதங்கள் அகப்பட்டன. சாணக்யன், தான்பெற்ற கடிதத்தைப் பர்வதேசனுக்குக் காட்டவே, "வர்த்தக வேஷத்துடன் எட்டு அரசர்களிடமிருந்த எண்மரும் ராக்ஷஸனது ஆட்கள்" என அக்கடிதத்தால் தெரியவந்தது. இவ்வெண்மரும் தக்ஷணமே பிடிபட்டனர். இவர்களை ஓர் காரியம் பற்றிக் கொல்லாமல் காவலில் விட்டு வைக்கும்படி சாணக்யன் கூறினன். பரதேசி வேஷத்துடன் வந்தவனை மட்டும் மூக்கறுத்து, அவன்செய்த குற்றத்தை யாவரும் அறியக் கூறிப் பறைக்கொட்டுடன் அவனைச்சுற்றி இழுத்துச் சென்றனர். ராக்ஷஸனால் வெவ்வேறு வேஷங்களுடன் அனுப்பப்பட்ட மற்றைய ஆட்கள், இது கண்டு, 'நமக்கும் இக்கதிவந்தால் என்செய்வது?' என்று அஞ்சித் தம்மிடமிருந்த கடிதத்தைக்கிழித்து வாயில் போட்டுமென்று விழுங்கித் திரும்பிப் பாராமல் எடுத்தனர் ஓட்டம்.

இதன்பின், சாணக்யன் பர்வதேசனைக் கொண்டு நந்தர்களுக்குப் பரமமித்திரர்களான காசி, மிதிலை, மச்சதேச அதிபதிகள் மூவர்க்கும் 'நீங்கள் சேனைகளுடன் வந்து எங்கட்கு ஸகாயம் செய்யவேண்டும்' என்று நிருபங்கள் எழுதச்செய்து, அவனைநோக்கி "இதனால் உண்டாகும் காரிய லாபத்தை நீ அதிவிரைவிற்கண்டு ஆச்சரியப்படுவாய்" என்றான். பிறகு அவன் மூன்று கடிதங்களுக்கும் ராஜமுத்திரையிட்டு, ஒருகடிதத்தைக் கமலாபீடனிடம் தந்து அவன்செய்யவேண்டிய காரியங்களை ரகஸ்யத்தில் தெரிவித்து, அவனைக் காசிராஜனிடம் அனுப்பினான். வேறு இருவரைப் பிடித்து ஒருகடிதத்தை மிதிலாபதி அரசனுக்கும், மற்றொன்றை மச்சாதிபதியிடமும் கொடுக்குமாறு அனுப்பினான்

கமலாபீடன் காசி நகர் வந்ததும், தன்னுடன்வந்த நம்பிக்கையுள்ள ஆள்களில் இருவரைப் பாடலீபுரம் செல்லும் மார்க்கத்திலிருத்தி, "காசிராஜன் தூதர்கள் இன்றேனும் நாளையேனும் பாடலீபுரம் செல்வது திண்ணம். அவர்கள் அங்கு செல்லும்போதும், திரும்பும்போதும், வந்து அறிவியுங்கள்" என்றான். பிறகு அவன் காசிராஜன் சமுகம் சென்று, சாணக்யன் கற்பித்தபடியே சமயோசிதமாக அவனுடன் வார்த்தையாடி, ஒரு கடிதத்தை அவனிடம் கொடுத்தான். சந்திரகுப்தனுக்கு அபயமளித்துத் தான் கௌடதேசத்தைப் படையெடுக்கப் போவதாகவும், அதற்குக் காசி ராஜனது உதவிவேண்டுமென்றும், இவ்வுதவிக்குக் கைம்மாறு காசி ராஜன் விரும்பியவிதம் நடக்குமென்றும், பர்வதேசனைக்கொண்டு சாணக்யன் எழுதிய கடிதம் அது.

காசி ராஜன், நந்தர்களிடம் அச்சமும் விசுவாசமும் கொண்டவனாதலின், தான் பெற்ற கடிதத்தை நந்தர்களுக்கனுப்பவும், அவர்கள் விருப்பின் படிக் கமலாபீடனைத் தண்டிக்கவும், தான் நடந்து கொள்ளவும் எண்ணி, அவனை நோக்கி "நல்லது. இன்று விடுதியில் தங்கி இரும். நாளை பதில் தருகிறோம்" என்றான். நியோகி "சரி" யென மரியாதையுடன் திரும்பினான். திரும்புங்காலையில் தனது ஆட்களில் வேறு இருவரை அங்கு வைத்து, நடக்கும் விசேஷங்களை அறிந்துரைக்குமாறு கட்டளையிட்டுச் சென்றான்.

நியோகி சென்றதும், காசிராஜன் தன்கைப்பட ஓர் கடிதமெழுதி அக்கடிதத்துடன் பர்வதேசன்து கடிதத்தையும் வைத்து, அவற்றை ராக்ஷஸனுக்கு இரண்டு குதிரை வீரர்கள் மூலம் அனுப்பினான். ராக்ஷஸன் இக்கடிதங்களை வாசித்துக் கொண்டிருக்கும்போதே மிதிலை நாட்டிலிருந்தும் மச்ச நாட்டிலிருந்தும் இத்தகைய கடிதங்கள் வேறு வேறு தூதர்கள் மூலமாக ராக்ஷஸனுக்குக் கிடைத்தன.

(இன்னும் வரும்.)

வி. பாலம்மாள்.

ஆத்திசூடி வெண்பா.

(78-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பஞ்சவரின் முன்னோனைப் பாஞ்சாலி தன் துகிலை
வஞ்சன் உரிந்திடவும் வன்சினந்தான்—விஞ்சாமற்
றேறினனால் மெய்ம்மைக்கோர் தேய்விலதென்(று.) ஆதலினால்
ஆறு வதுசினமே ஆம். (2)

[(உரை):— பஞ்சவரின்-பாண்டவர்களுள், முன்னோன் - மூத்தவராகிய தருமபுத்திரர், அப்பாஞ்சாலிதன்-(அவரது யாகபத்தினியாகிய) அந்த திரௌபதையினுடைய, துகிலை – சேலையை, வஞ்சன்-மோசக் கருத்தினால் வருவித்து மாயச் சூதாடச் செய்த துரியோதனன், உரிந்திடவும்-(தனது தம்பி துர்ச்சாதனனைக்கொண்டு இராஜசபைநடுவில் மானமழிக்கத் துணிந்து)] களையச் செய்த போதும், மெய்ம்மைக்கு – உண்மைக்கு, ஓர்

தேய்வு - ஒருவித அழிவும், இலது - எக்காலத்திலும் உண்டாதல் இல்லை, என்று - என்னும் உறுதியை யுட்கொண்டு, வன்சினந்தான் - கடியகோப மானது, விஞ்சாமல்-வெளியே காணப்படாமல்; தேறினன் - (தடுக்காமல்) மௌனமாக விருக்கும் மனவலியைப் பெற்றிருந்தான், ஆதலினால்-ஆகை யால், ஆறுவது-தணிவது, சினமே-கோபமே, ஆம்-(ஔவையார் அருளிய அருமை வாக்கின்படி) ஆகும்.]

என்னே? உலகில் எத்தகைய பொறையுடையாரும் மானத்திற்குத் தாழ்வு வருமென்னில், அதனைத் தடுக்கும்பொருட்டுக் கோபித்தல் இயற் கையும், இன்றியமையாக் கடமையுமாகும். அங்ஙனமாக, இத்தருமபூபதி, தம் அருந்ததிக் கிணையாகிய உத்தம மனைவியை அன்னியன் தீண்டி உடையைக் களையத் தொடங்கிய விடத்தும் மனம் பதறாது, "தருமமே ஜயம்" என்பதாகத் தம் மனத்தில் எப்போதுமுள்ள அழியா வுறுதியி னால் அமைதியாக இருந்தார். இவ் வுயர் நிலை அவரை யன்றிப் பிறரால் அடைய வொண்ணுமோ? அவ்வுறுதியின் பயனன்றோ அப்பாஞ்சாலிக்குச் சேலை வளர்ந்ததும், பாபிகளின் எண்ணம் ஓய்ந்ததும். இதனால் முக்காலத் திலும் உண்மைக்கு நசிப்பில்லை யென்பதும், அதர்மம் ஓங்காதென்பதும் ஆகிய உறுதியை, எவரும் உள்ளும் புறமும் ஒன்றப் பாராட்டினால், தவ றாது பயன் பெறுவா ரென்பதும், பெறப்படுகின்றன. தவிர ஔவையார், "ஆறுவது" என்னும் மொழியை முன்னர் அமைத்து, "சினம்" என்ப தைப் பின்னர் அமைத்த நுட்பம் வியக்கத்தக்கதாகும்: முன்னர்க் கோபம் வந்து, பிறகு விரைவாகவோ, தாமதமாகவோ, தணிவது, சிறப்புடைய தன்று. அக்கினியும் தணிவதியற்கை. அறிவுடைய மாந்தர்க்கு அது புக ழாகாது. கோபம் வருதற்குத் தக்க காரணம் ஏற்படுங்கால், அது தன் னுள் தலையெடாவண்ணம் "சாந்தம்" என்னும் குளிர்ச்சியை வலிந்தாயி னும் வருவித்துக் கொண்டு, பின்னர் ஜீவ சுபாவப்படி எழத்தகுவதாகிய கோப வெப்பம் மூளாமலும் முகத்திற் பிரதி பலிக்காமலும் அணையும்படி செய்தல் வேண்டு மென்பதேயாம்.

அன்றியும், 'தணியவேண்டுவது கோபம்' என்று கூறியது கொண்டே, அடங்காமல் மேலெழுந்து நிற்க வேண்டிய குணம் அக்கோபத்திற் கெதி ரிடையாகிய சாந்தமே யென்பதும் பெறப்படும்.

இயல்பாகவே கோபம் என்னும் குணம் (பாப புண்ணியங்களின் பாகு பாட்டினையறியத் தக்க பகுத்துணர் வில்லாத அறிவிலிகளிடம்) இல்லாம லே யிருக்குமாயின், அவர் பொறையுடன் காணப்படுவது சிறப்புடைய தன்றாம் என்பதும், சினம் இருந்தே அதனைத் தணிக்க வேண்டும் என்ப தும், இவ்வாக்கியத்தினால் தெளிய வுணரப்படும். தீவினைகளையும் கூடா

வெண்ணங்களையும் மனத்தில் எழாமல் கண்டித்து அகற்ற வேண்டியது எவர்க்கும் தலைக்கடமை யாதலால் "சினம்" என்னும் உயர்குணம், இயல்பாக எல்லாவுயிர்களிடத்தும் அமைந்து கிடத்தல், கடவுள் கற்பனையேயாகும். ஆதலின், அதனை அறக் களைதல் என்பதும், இன்றியே பிறத்தல் என்பதும் இயல்வதொன்று அன்றாம். அது பற்றியே "அழிப்பது" என்று கூறாமல் "தோன்றும்போதெல்லாம் அடக்கி வெளிப்படாமல் தணிப்பது" என்பது தோன்ற, "ஆறுவது" என்றருளினர். ஆகவே நல்ல பொருள் தீயபொருள் இன்னதெனக் கருதும் உணர்வின்று, அனைத்தையும் சுட்டெரிக்கும் நெருப்பினையே இச் சினம் ஒத்ததென்பதை உணர்த்தும் பொருட்டே ஆறுவது என்னும் தமிழ் மொழிவழக்கில் "சூடான பொருட்கே" சொல்லத் தகும் வார்த்தையினை அமைத்தாரென்பதும் கொள்ளத் தகும். (இன்னும் வரும்.)

அசலாம்பிகையம்மாள்.

புத்தகம்.

மலர்தலை உலகில் மன்னிய மானிடர்
அலகில் கணக்கினர்க் கறிவை ஈந்திடும்
புத்தக மே!நின் புகலரும் பெருமை
எத்தன் மைத்தென யான்இயம் பிடுவேன்!
எண்ணும் எழுத்தும் இயைந்தனை ஆதலின்
கண்ணல வோஇக் காசினி யோர்க்குநீ?
உயிரும் உள்ளாய்; மெய்யும் உள்ளாய்;
செயிர்தீர் நண்பன் செப்பில் உனைப்போல்
யாரே உள்ளார்? யார் உரைத் திடுவார்?
காரே போலும் கைம்மா றெண்ணது
வாலிபர் முதலாய் வயோதிகர் வரைக்கும்
சாலவும் அவரவர் தன்மைக் கேற்பத்
தாங்கி விடயம் தந்தளித் திடுவை.
தீங்கரும் பின்நறுந் தேனினும் சீரிய
இன்றமி ழாதி எந்தப் பாஷையும்
உன்றனுக் குரிமை யாகவே உள்ளது.
ஆதலின் உனைப்போல் அனைத்தினும் வல்லவன்
ஓதுதற் கொருவனிவ் உலகினில் உளனோ?

மிக்க அன்புடைய மித்திரர் உனைப்போல்
இக்கலி யுகத்தில் யாரே உள்ளார்?
மங்கல வாழ்த்தும் மகிமையும் நின்போல்
இங்கடைந் தோர்கள் யாரே இசைக்கின்?
அக்ஷய மேனீ அடைந்துளை யாதலின்
பக்ஷமிக் கார்ந்த பரமனை நிகர்ப்பைநீ.
செவிக்குண வளிக்கும் திறலினும், செறிதுயர்
அவிக்கும் திறலினும் ஆருனை நிகர்ப்பர்?
பத்தி உனைப்போல் பார்க்கில் யார்க்குள?
புத்தி புகட்டலில் புரையறு நினைப்போல்
இத்தரை தன்னில் யாருளர் இசைக்க?
ஓர்அணி ஒருவன் உடையனேல், அவன்தான்
தாரணி யோர்க்குச் சாற்றுவன் பெருமையாய்.
சீரணி எத்தனை சேர்ந்துளை நீதான்!
நூறணி உடையைநீ நுவல்கிலே ஏதும்.
வேதம் உடைமையின் வேதியன் என்கோ?
நீதி உடைமையின் நினைஇறை என்கோ?
அர்த்த விடயம் அமைதலின், நினையான்
வர்த்தகம் செய்யும் வைசியன் என்கோ?
மற்றும் தொழிற்கு வாய்த்தன யாவும்
உற்றனை சூத்திரன் எனஉனை உரைக்கோ?
பன்னுதற் கரிய பண்பெலாம் உளநினை
இன்னவன் தானென யாருரைத் திடுவர்?
நல்குர வுறினும் நற்குடிப் பிறந்தோர்
'இல்'எனும் சொல்லை இசையார்; அதுபோல்
சிதறிய போதும், சேர்ந்தார்க் குன்னை
உதவுவை. சற்றும் ஒளியாய் சிறிதும்.
என்னை? உன் உதாரம் யார் பெற்றுள்ளார்?
சொன்னலம் பொருள்நலம் தோன்ற வாய்ந்த
நாற்கவி யாவும் நனிநிறை நின்னைப்
போற்கவி வாணர் புகலவும் உளர்கொல்?
தொட்டனைத் தூறும் சொல்மணற் கேணியென்

றிட்டமா யுன்னை இவ்வுல குள்ளவர்
ஆயுந்தொறுமவர்க் கறிவுவெள் ளத்தினை
ஈயும் தொழிலுனக் கன்றியார்க் குளதே?
குறைவில் செல்வக் கொற்றவர்க்கும் புறத்(து)
உறுமரி யாதை ஒருசிறி தேயாம்.
உன்நல முண்டேல் உலகில் அவர்பெறும்
நன்னலம் யாரே நவிலும் தரமுளார்?
உனதுபே ருதவி உரைக்கில் பலஉள.
எனினும் நீதளர் வெய்தினை யாயின்,
அந்த வேளையில் அவனியோர் தருகிற
தொந்தர வுனக்குச் சொல்லவும் படுமோ?
குத்துவர்; ஊசி கொண்டுனைக் குடைவர்
கத்திகை யாடுவர் கருணையில் மானிடர்.
எத்தனை விதம்தான் இயற்றினும் துன்பம்
அத்தனைத் துயர்க்கும் ஆளாய் உன்றன்
சித்த மகிழ்ந்துநீ செய்உப கார
உத்தம நற்குணம் ஒத்ததொன் றுண்டோ?
கையினுக் கழகு கங்கணம் காப்பெனல்
மெய்யோ? இல்லை. விளம்பிடில் நீயே.
ஆதலின் அன்றே அறிவுடை யோர்கள்
ஓதினர் யாரும் உணர்ந்திடும் வண்ணம்
"புஸ்தகம் அஸ்த பூஷணம்" என்றே.
இத்தகு குணங்கள் இலகிய நினைஎவர்
கைத்தலத் தேனும் காணுங் காலை
ஏளனம் செய்குவர் ஏழைமாந் தர்கள்
ஆ! ஆ!! அவர்அறி யாமைதான் என்னே?
தாவா இன்பம் தந்தளித்திடுவோய்!
நந்தா விளக்கே! நானிலத் தோர்தம்
சிந்தா குலத்தைத் தீர்க்கும் தேவே!
எந்த நேரமும் என்றன்
சிந்தை உன்வயிற் சேரவேண் டினனே.

A. R. ஸ்ரீநிவாச முதலியார், ஆனைமலை.

விவேகோதய அபிமானிகளுக்கு ஓர் விக்ஞாபனம்.

சென்ற வருஷம், நமது சகோதரர் ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையர் அவர்களுடன் நான் சம்பாஷிக்கையில், ஓர் நாள், "அண்ணா! தங்களைப் போன்று தேசாபிமானமும், பாஷாபிமானமும் தமிழபிவிருத்தியில் ஆர்வமும் முயற்சியும் உள்ளோர், இனிய, எளிய தமிழ் நடையில் ஒருமாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை நடத்தினால், எவ்வளவோ லோகோபகாரமாயிருக்கும். நீங்கள் ஏன் ஒன்றை ஆரம்பிக்கக்கூடாது?" என்றேன். அதற்குஅவர் "முக்யமாக வேண்டியது பணம். பத்திரிகையின் யோக்கியதைக்கும் அதனை நடத்துவோரது திறமைக்கும் ஏற்பப் பத்திரிகை விருத்தியாகும். என்னிடத்தில் அநேகருக்கு அபிமானமுண்டு. ஆயினும் என் கையில் பணம் இல்லாததாலும், யான் இயற்றியிருக்கும் "அநும் பொருட்டிரட்டு" என்னும் நூலை அச்சிடுவதிலேயே இப்பொழுது எனது முழுகவனத்தையும் செலுத்த வேண்டியிருப்பதாலும், இப்பொழுது, பத்திரிகை நடத்த முடியாது. புஸ்தகம் முடிந்தவுடன், பணமும் அகப்பட்டால், நீ விரும்பியபடி பத்திரிகை நடத்தத் துணிவேன்" என்றார்.

இதைக்கேட்டு மகிழ்வெய்திய யான், "பணக்கவலை உங்களுக்கு வேண்டாம். புத்தகவேலை முடிந்தவுடன் பத்திரிகை ஆரம்பித்துவிடுங்கள். நமது பத்திரிகைக்கு "விவேகோதயம்" என்ற பெயரிடுவோம் என்றேன்.

பந்து முறையையும் மரியாதையையும் அனுசரித்து "நமது பத்திரிகை" என்று நான் மகிழ்ச்சி மேலீட்டால் கூறியதைத் தம் மனத்தில் வைத்திருந்த என் சகோதரர், தாம் வாக்களித்தபடி ஆரம்பித்த இப்பத்திரிகையின் அதிபராக, இம் மேமாதம் முதல் என்னையும் நியமித்துள்ள விஷயத்தை அறிவித்திருக்கின்றனர்.

பலசவரன்களால் ஆகிய காசுமாலை, கடியார அட்டிகை, கொலுசு முதலிய அணிகளை அவற்றின் விலையையும் அருமையையும் அலங்காரத்தையும் எண்ணிப் பூண்பதற்குப் பெண்பாலார் ஆசை கொள்ளினும், பளுமிக்க அவற்றை சுமக்குங்கால் ஏற்படும் சிரமம் கொஞ்ச நஞ்சமன்றன்றோ? நவநாகரீகம் மலிந்த இக்காலத்தில் "நாமும் ஓர் பத்திராதிபர்" என்ற ஓர் பெரும் கண்யம் பெறுவதில் எனக்கு உள்ளபடியே ஆசைதான். ஆயினும் பத்திராதிபருக்கு இருக்கவேண்டிய அறிவும், ஆற்றலும், பொறுப்பும் இவ்வளவு என யான் சிந்திக்குந்தோறும், மிக்க அதைரியம் எனக்கு உண்டாகின்றது.

ஆயினும், ஆசை மிகுதியாலும், பிறர் கூறும் தேறுதல்களாலும், எங்ஙனம் அந்நகைச்சுமை காலாந்தரத்தில் சர்வசாமானியமாக ஆகிவிடுகிறதோ, அங்ஙனமே, எனக்கு இப் பத்திரிகை நடத்துவதில் உள்ள அவாவினாலும், கல்விமான்களாகிய பல சகோதரர்களும, வித்யாவதிகளாகிய பல சகோதரிகளும்கூறும் உற்சாகமொழியாலும், சகோதரர் ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்களின் ஆதரவாலும், எனக்குப் போதிய ஆற்றலும் அனுபவமும் அறிவும் உண்டாய் விடும் என்றும், அங்ஙனம் உண்டாவதால் எனது அதைரியம் அறவே நீங்கும் என்றும் நினைந்து, இக்காரியத்தை அவரது கட்டளைப் பிரகாரம் கைக்கொள்ளுகின்றேன்.

எனது வித்யா குருவும் நற்றாயுமாகிய மாமதிபடைத்த ஸ்ரீமதி அம்மையின் பேருதவியும், பரிபூர்ண ஆசிர்வாதமும், சீர்த்தி விசேஷமான

ந்தையார் டாக்டர் ஏ. ஆர் வைத்திநாதசாஸ்திரியார் எம். ஏ. மெ [illegible] ம. ஃ. எம். டி. அவர்களது பேரருளும், நம்மைப்போன்ற அபிமானிகளது ஆதரவும் இருக்கும்பொழுது, என்முயற்சியில் எவ்வகைக் குறைவும் நிகழாதென்பதே எனது துணிவு. நிற்க

காகிதத்தின் விலை ஒன்றுக்கு மூன்றாக விற்கும் இச் சமயத்தில், தபாற் கூலி உள்பட இப்பத்திரிகை வருஷ சந்தா ரூ 1-8-0க்குக் கொடுபடுவதும், ஆரம்பமான இரண்டொரு மாதங்களுக்கு உள்ளாகவே பலரது நல்அபிப்பிராயத்தையும், ஆதரவையும் பெற்று நாளுக்கு நாள் அபிவிருத்தி அடைந்து வருவதுமே, இப்பத்திரிகை, இடையூறெதற்கும் தலை சாயாது, செழித்தோங்கிப் பரவும் என்பதற்குப் போதிய சான்றுகளாகும்.

யானும் எனது சகோதரரும் பொருள் வருவாய் கருதாது; தேச நன்மை ஒன்றையே கருதி, (அவர் ஸ்தாபித்து நடத்திவரும் சங்கப் பத்திரிகையாக) வெளிப்படுத்திவரும் இப்பத்திரிகை, தமிழகத்தும் பிறவிடத்தும் பரவுமாறு இறைவன் திருவருள் புரிவாராக.

வி. பாலம்மாள்,
உப-பத்திராதிபர்.

விநோதக் கூற்று.

கர்வமுள்ள ஒரு தமிழ் வித்துவான் சிறுவன் ஒருவனை நோக்கி "இலக்கணமாகப் பேசினால் இவனுக்குத் தெரியாது" என்று எண்ணி, "தம்பி! சோறு எங்கே விக்கும்?" என்றான்.

சிறுவன்:— "அதுவா? தொண்டேலே விக்கும்" என்றான்.

ஒருவன்:— (கிறுக்கன் போலிருந்த சுப்பனைப் பார்த்து) சுப்பா! இந்த இருப்புப் பாதை எங்கு போகிறது?

சுப்பன்:— என்? அது போயிடுமோ? போகாதபடிதான் ஆணிவச்சு அரஞ்சிருக்கே. லயிலுதான் அது மேலே ஓடும்.

ஒருஸ்திரியின் வாயில் வைத்தியன் தர்மாமிட்டர் என்ற உஷ்ணமானியை 4, 5, நிமிஷம் வைத்தெடுத்ததும் அவளுடைய

கிழக்கணவன்: ரூபா அதன் விலை என்ன?

வைத்தியன்:— என்? அது உமக் கெதுக்கு?

கிழவன்:— அவசியம் அதுஎனக்கு வேணும். சனியன் புடிச்சமூளி, அலப்பு வாயைக்காட்டிக் காட்டி லொட லொட என்னு எதாவது திட்டி எரிஞ்சுகிண்டே இருக்கரவள், அதை வச்சொடனே வாயெத் தொரந்தாளா பாருமே.

ரா. பாலசுப்பிரமணியன்.

வாழ்த்துக் கவிகள்

கரந்தைத் தமிழ்ச் சங்க வாழ்த்து

[இவை, ஆண்டிப்பட்டி ஜமீந்தார் ஸ்ரீமாந் பெத்தார்ச்சி செட்டியார் எம். ஆர். ஏ. எஸ். இச்சங்க வருஷோத்ஸவ தினத்தன்று அக்ராஸனம் வகித்து அச்சபையை அலங்கரித்தபோது கூறியவை.]

நாற்றிசையும் எத்திசை கொள் நற்றமிழ்க்கும் ஏனையபன் னலங்களுக்கும்
ஏற்றமிகு 'பெத்தாச்சி' ஆனதினல் "பேத்தாச்சி" என்ன யாரும்
போற்று மியற் பேருற்ருய்! உருச்சிறியாய்! மனப் பெரியாய்! புகழ்மிக்கா [ர்ந்தாய்!
சாற்றருநின் சுகவாழ்வு வளம் ஈகை நலமாதி தழைத்து வாழி!

ஆருயிரே அனைய நறுஞ் செந்தமிழா தியவளர்க்கும் அணிமிக் கார்ந்த
சீரியஇத் தஞ்சையினைச் சார்"காந்தைத் தமிழ்ச்சங்கம்" செழித்துவாழ்க
நேரியஇச் சபையைநனி நடத்தும் உமாமகேச் வரனும் நீடு வாழ்க;
கூரிய நன் மதியொடிவண் கூடியவண் டமிழ்வளர்ப்போர் குலவி வாழ்க

ஸ்ரீமத். வா. கோபாலசாமிரகுநாத ராஜாளியார் அவர்கள் வாழ்த்து.

[மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தின் வருஷோத்ஸவ தினத்தன்று அக்கிராஸனம் வகித்த காலையில் கூறியவை.]

அரியநலம் எமக்கியற்ற அரித்வார மங்கலம் வாழ் அண்ணல்! நீஇங்
குரியதலை வோனுகும் உறுபேருற் றேம். எமக்கிங் கொப்பார் யாரே?
பிரிய நினை என் "மதுரை மாணவர்செந் தமிழ்ச்சங்கம்" பிரிய எங்கும்
தரியலர்இல் கோபால சாமிரகு நாதன்எனும் தமிழ்க்கோ மானே!

மாணவர்கள் மாணவர்கள் ஆவதெங்ஙன்?" என்பதனை மகிழ்ந்து யாரும்
பேணஉபந் யாஸஞ்செய் பெரியோய்! நின் பிரசங்கம் பிரசங்கண்டே
காணவருங் காரணைய கடவுளடி கருத்திருத்தும் கவிஞர் செல்வ
மாணவ! வா. கோபால சாமி ரகுநாதன் எனும் வள்ளால்! வாழி!

வெண்பா.

மாலை யகற்றும் மதுரமொழி யார்க்கிப்பூ
மாலை புனைகின்றேன் வண்டமிழீர்! —மாலைத்
தகப் பணியும் கோபால சாமிரகு நாதன்
மிகப் பொலியும் வாழ்வு மிக.

இளங்காட்டு நற்றமிழ்ச் சங்க வாழ்த்து.

"வளங்காட்டு தமிழ்க்குமகா மகோபாத்தி யாய! இவண் வருக"! என்ன
உளங்காட்டு மெய்யன்பே உடைய இந்த ஊரார்கள் உவந் தழைப்ப;
இளங்காட்டு நற்றமிழ்ச்சங் கத்"தொன்பான் உத்ஸவத்தில் இறைமை [பூண்ட
ளம் காட்டு மொழிச்சாமிநாத!இச்சங் கமும்நீயும் குலவி வாழி!

மதுரைத் தமிழ்ச்சங்க வாழ்த்து.

[சென்ற வருஷோத்ஸவத்தில் ஸ்ரீ சாமிக்கண்ணுப்பிள்ளை அக்ராஸனம் வகித்தபோது கூறியது.]

பூமிக்கண் ணுளபலவாம் புண்ணியமா நாடெல்லாம் புகழும் தெய்வப்
பாமிக்கண் ணித்திகழ்பாண் டியநாட்டின் தலைநகராம் பான்மைவாய்ந்த
தாமிக்கண் ணகன்மதுரைத் தமிழ்ச்சங்கத் திருநாள்பே ரவைவகித்த
சாமிக்கண் ணே! நீயும் இத்தமிழ்ச்சங் கமும்என்றும் தழைத்து வாழி.

[இவ்வருஷம் ராவ் பகதூர் பாலக் காட்டுச் சின்னஸாமிப்பிள்ளையவர்கள் அக்ராஸநம் வகித்த போது கூறியது.]

பாலைக்காட் டும்சுவைப்பைந்தமிழ்ப் பாண்டித்துரை சங்கப்பான்மையாவும்
ஏலக்காட் டிடும்எங்கள் ராஜரா ஜேசன், இவண் இறைமை ஏற்ற
பாலக்காட் டுச்சின்ன ஸாமி,முத லியதமிழ்மெய்ப் பரிவுவாய்ந்தோர்
சேலைக்காட் டும்விழியார் உமையவள் தன் திருவருளால் செழித்து வாழி.

ஞானபிவிர்த்தி சபை வாழ்த்து.

[சப்ஜட்ஜ் ஸ்ரீ. சுப்பைய முதலியார் வருஷோத்ஸவதினத்தன்று அக்ராஸனம் வகித்தபோது கூறியது.]

அப்பையணி சடையரும்வந் தாய்சங்கப் பலகையின்மீ தமர்ந்துபோற்றும்
முப்பயன் வீடுதவுமுயர் முத்தமிழை வளர்க்கநனி முயல்வோ ராய
இப்பையன்கள் "ஞானபி விர்த்திசபை" நனிவாழ்க. இறைமை யேற்ற
சுப்பையனும் மற்றெவரும் மெய்ப்புகழோடிப் புவியில் துலங்கி வாழ்க.

மேலாய்க்குடித் தமிழ்அபிவிர்த்திக் கந்தவேள் சங்கவாழ்த்து.

["செந்தமி'ப் பத்திராசிரியர் ஸ்ரீ திரு நாராயணையங்கார் ஸ்வாமிகள் வருஷோத்ஸவ தினத்தன்று அக்ராஸநம் வகித்தபோது கூறியவை.]

ஒருநாரா யணஸ்வாமி திறமையைஇப் புவிசுமக்கும் உரகனும் தன்
இருநாவா யிரத்தாலும் இம்மியும்என் றேனும் இசைக்க இயலாதென்றால்
திருநாராயணஸ்வாமி திறமைஎல்லாம் உரைத்திடயான் திறனுள்ளேனோ
பெருநாரா தியபிறங்கு மவனுமிச்சங் கமும்பிறரும் பெரிதும் வாழி.

வெண்பா.

மின்னுபுகழ் வாய்ந்தஎம் வேலுஸா மித்தேவன்
மன்னு சபைத்தலைமை வாய்ந்தனனால்—பன்னாளும்
இற்றையினும் மேலாக இத்தமிழ்ச்சங் கம் தழைக்கும்
நற்றமிழும் ஓங்கும் நனி.

ம. கோபாலகிருஷ்ணையர்.

குறிப்பு.— நமக்குக் கிடைத்துள்ள 11-புத்தகங்களைப் பற்றிய மதிப்புரை அடுத்த சஞ்சிகை முதல் வெளி வரும்.

பத்திராதிபர்.

சமாசாரக் கொத்து.

சென்ற சஞ்சிகையில் நாம் "சகோதரி ஸ்ரீமதி வி. யாலம்மாள் வருகிற மே மீ முதல் நமது பத்திரிகையின் உதவிப் பத்திராதிபராக இருப்பர்" என்று கூறியிருந்தோம். இப்பொழுது அவ்வம்மை எம்முடன் உப-பத்திராதிபராகிய நற்செய்தியை அறிவிக்கின்றோம்.

ஸ்ரீமதி வி பாலம்மாளையும், ஆத்தங்குடி விவேக விளக்க வித்யாசாலையரையும் போன்று, பிறரும் நம் பத்திரிகாபிவிர்த்தியில் கவலையும் கருத்தும் வைப்பராயின், கூடிய சீக்கிரத்தில் 1000 கணக்கான சந்தாதார்களை நம் பத்திரிகை பெற்றுவிடும் என்பது திண்ணம். ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மை, ஏ. ஆர். ஸ்ரீநிவாச முதலியார், ஜி. சுந்தரேசையர் முதலிய அபிமானிகள் இயன்றவாறு பாடுபட்டுச் சந்தாதார் சேர்த்து நமக்கு அனுப்பி வருவதற்காக அவர்களுக்கு மனப்பூர்வமாக நன்றி கூறுகிறோம்.

தமிழகச் செய்தி.

தமிழ்ச் சங்க வருஷோத்ஸவங்கள்.

ஞானபிவிர்த்தி சபை.— மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலையைச் சார்ந்த இச்சபையின் பதின்மூன்றாம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் ஏப்ரல் மீ 29உ 30உ களில் ஸப் ஜட்ஜ் ஸ்ரீமான் சுப்பையாமுதலியாரவர்களது அக்ராஸநத்தின் கீழ் இனிது நிறைவேறியது. முதல் தினத்தில் வருடாந்த அறிக்கை வாசித்தானதும், மாணவர்க்குப் பரிசளிக்கப்பட்டது. இப்பரிசு அளிப்பு நிறைவேற ஸ்ரீமான்களாகிய சுப்பையா முதலியார், டி. வி. ஸ்ரீநிவாசையங்கார் பி. ஏ. பி. எல்.; டி. என். சுந்தரராஜையங்கார் பி. ஏ. பி. எல்; ம. கோபாலகிருஷ்ணையர், சிதம்பரப் புன்னைவனநாத முதலியார், மேலாய்க்குடிக் காந்திமதிநாத பிள்ளை முதலிய உதாரகுண சீலர்கள் பணமும் புத்தகமும் உதவினர். அன்று "கம்பனும் சோழனும்" என்ற நாடகம் மாணவர்களால் நடித்துக்காட்டப்பட்டது, பிறகு சிறந்த நாடகபாத்திரர்களுக்கும் பரிசளிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீமான்களாகிய ராய் பகதூர் டி. யன். சிவஞானம் பிள்ளை பி. ஏ. ம. கோபாலகிருஷ்ணையர், சுப்பையா முதலியார் ஆகிய மூவரும் பரிசு பெறத் தக்கோரைக் குறிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். "கம்பர்" போல் நடித்த சிறுவனுக்கே முதற் பரிசு கிடைத்தது. இரண்டாம் நாளில் அநேக வித்வான்கள் பல அரிய விஷயங்களைப்பற்றி நன்கு பிரசங்கித்தனர்.

இளங்காட்டு நற்றமிழ்ச் சங்கம்:—இதன் ஒன்பதர்வது வருட பூர்த்தி மகோத்ஸவம் மகா மகோபாத்யாயர் பிரமஸ்ரீ வே. சாமிநாதையரின் அக்ராஸநத்தின் கீழ் இம்மாதம் 7, 8உ களில் நன்கு கொண்டாடப்பட்டது. பல வித்வான்கள் அரும் பெரும் விஷயங்களைப் பற்றிப் பிரசங்கித்தனர். காலஞ்சென்ற சோழவந்தானூர் மகாவித்வான் ஸ்ரீமத் அரசஞ் சண்முகனாரது பெயரை நாட்டி இந் நற்றமிழ்ச் சங்கத்தார் "சண்முகவிலாச புத்தகசாலை" ஏற்படுத்தியிருப்பதறிந்து மகிழ்கின்றோம். உண்மைத் தமிழபிமானிகளும் ஸ்ரீமான் சண்முகனாரிடம் மெய்யன்பு பூண்டாரும் இப்புத்தகசாலைக்குப் பல விதத்தும் உதவி புரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மேலாய்க்குடிக் கந்தவேள் தமிழ் அபிவிருத்தி சங்கம்:—இதன் மூன்ரும் வருஷோத்ஸவம் ஸ்ரீ திருநாராயணையங்கார் ஸ்வாமிகளின் அக்ராஸநத்தின் கீழ் 10, 11வ களில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இக்கூட்டத்திலும் பல வித்வான்கள் பல முக்கிய விஷயங்களைக் குறித்துப் பிரசங்கித்தனர். இதுகாறும் எச்சபையிலும்—மதுரைத் தமிழ்ச் சங்கத்திற் கூட—அக்ராஸநம் வகியாத ஸ்ரீமாந் நாராயணையங்காரவர்கள் அக்ராஸநம் வகித்ததும், இச்சங்கத்தின் நிரந்தர அக்ராஸநாதிபதியாக இருந்த ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்கள், தமது பதவியை ராஜி நாமா செய்து இச்சங்கநன்மையைக் கருதி, ஸ்ரீமான் வேலுசாமித்தேவரவர்களைத் தம்முடைய ஸ்தானத்தில் நிரந்தர அக்ராஸநாதிபதியாக ஆக்கியதுமே சபை சம்பந்தமான முக்ய விசேஷங்களாகும். இனி கூடிய சீக்கிரத்தில் ஓர் தக்க தமிழாசிரியர் இச்சங்கக் கலாசாலைக்குத் தமிழபிமானமும் தருமகுணமும் வாய்ந்த ஸ்ரீ மான் வேலுசாமித் தேவரவர்களது விருப்பிற்கிணங்க, ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்களால் தெரிந்தெடுத்து அனுப்பப்படுவர். தமிழபிமானத்திலும் குணத்திலும் ஸ்ரீமான் பாண்டித்துரையே எனத்தகும் தகைமை வாய்ந்த ஸ்ரீ மான் வேலுசாமித் தேவரை நிரந்தர அக்ராஸநாதிபதியாகவும், இராமநாதபுரம் ராஜா ஸ்ரீமாந் ராஜராஜேச்வர முத்துராமலிங்க சேதுபதியவர்களைப் பரிபாலகராகவும் கொண்ட இச்சங்கம் நீடூழி தழைக்கும் என்பதற்கையம் என்னே? மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தின் கிளைச்சங்கங்களுள் ஒன்ருகிய இஃது அடைந்துள்ள உயர்வும் பெருமையும் பிற சங்கங்களும் எய்த ஈசன் திருவருள் புரிக.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கம்:— ஸ்ரீமாந் ப. சம்பந்தம் முதலியாரது நல்வரவை உத்தேசித்து இச்சங்கத்தின் 15-ஆவது வருஷபூர்த்தி மஹோத்ஸவம் சின்னுட்களில் கொண்டாடித் தீரவேண்டியதாயிற்று. ஆதலின் அச்சங்கத்தார் வழக்கப்படிப் பல்லோர்க்கும் அழைப்புக் கடிதம் முதலியன அனுப்ப முடியாமற் போயிற்று. இவ்வருஷோத்ஸவம் இம்மாதம் 20, 21, 22, 23வகளில் கொண்டாடப்பட்டது. விபரம் முதலியன அடுத்த சஞ்சிகையில் வரும். சென்ற வருஷத்திய அறிக்கை நமது பத்திரிகா நேயர்களுக்கு இம்மாத சஞ்சிகையுடன் அனுப்பப்பட்டுளது.

மதுரைத் தமிழ்ச் சங்கம்:— இதன் வருஷோத்ஸவம் பாலக்காட்டு ராவ் பகதூர் பி. சின்னசாமி பிள்ளையவர்களின் அக்ராஸனத்தின்கீழ் 18, 19, 20வகளில் வெகு விமரிசையுடன் கொண்டாடப்பட்டது. மாகாணக் கூட்டத்திற்கு வந்திருந்த பிரமுகர்களிற் பலர் இதற்கும் முதல் நாளன்று வந்திருந்தனர். நடுநிலைமை வாய்ந்த நல்லோராகிய ஸ்ரீமாந் சின்னசாமி பிள்ளையவர்களை அக்ராஸநராகப் பெற்றதே இச்சங்கக் கூட்டத்தில் நாம் குறிப்பிட்டுக் கூறக் கூடிய முக்கிய விஷயமாகும். ஒன்றையொன் றிகழும் சமயக் கொள்கைகளைப் பற்றிய வாதங்கள் நடை பெற இச்சங்கத்தார் இடந்தந்தமையும், வழக்கம்போல ஸ்ரீமாந் பாண்டித்துரைத் தேவரது சிற்றுருவைக்கூட கண்டு களிக்க முடியாதபடி, இவ்வருடத்திய அறிக்கை அச்சாகியுள்ளதும், ஆங்கிலத்தில் மட்டும் பல பிரசங்கங்கள் நடை பெற்றதும், பெரிதும் விசனிக்கத் தக்கவைகளே.

பத்திராதிபர்.

சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் இயற்றியவை.

1.	தமிழ்மொழிவரலாறு—(காலிகோ)	2—0—0
2.	நபாவதி அல்லது காணுமற் போன மகள்	1—0—0
3.	கலாவதி ஓர் புதிய தமிழ் நாடகம்.	1—8—0
4.	நாடகவியல் (ஓர் நாடகத் தமிழிலக்கண நூல்.)	0—8—0
5.	தனிப்பாசுரத் தொகை. (முதற்பகுதி)	0—4—0
	(ஜி. யு. போப் ஐயரவர்களால் ஆங்கில பாஷையிற்செய்யுளாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது; காலிகோ பயிண்டு)	1—0—0
6.	பாவலர் விருந்து (செய்யுள் நூல்கள் கொத்து)	0—8—0
	ஷை காலிகோ	1—0—0
7.	மதிவாணன் (புதுவதுபுனைந்ததோர் செந்தமிழ்க்கதை)	0—8—0
	ஷை (துணியட்டை யிட்டது.)	0-12—0
8.	மான விஜயம் (செய்யுள் நாடகம்.)	0—8—0
9.	ஸ்ரீமணிய சிவனார் சரித்திரம்.	0—2—0
10	மதுரைமாலை (ஸ்ரீஸபாதிபதி முதலியவர்கள் இயற்றியது)	0—1—6

வேண்டுவோர் மதுரையிலிருக்கும் 'விவேகோதயம் ஆபீஸு'க்கேனும் அல்லது, "எஸ். நடராஜையர், 735 நிர். வீடு, காக்காத் தோப்புத் தெரு, மதுரை" என்ற விலாசத்திற்கேனும் எழுதிப் பெறுக.

ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் நூல்கள்.

மனம்போல வாழ்வு:—இஃது இம்மை மறுமை இன்பங்களை அடைதற்குரிய நெறிகளைத் தெளிவாகக் கூறும் அரிய நூல். இது முற்றிலும் திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு.

மெய்யறிவு:— அறமும் பொருளும் இன்பமும் வீடும் அவற்றைச் செய்யும் வழிகளும் பல உபமானங்களோடு மிகச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டுள. இது நீதிநூல்களின் காரணமெனத் தக்கது.

அகமே புறம்:- – இகத்திலும் பரத்திலும் மேலான நிலைகளை அடைதற்குரிய மார்க்கங்களை வரிசைப்படுத்தி இனிமையாகக் கூறும் ஒரு சிறந்த நூல். இதனை ஒவ்வொருவரும் கற்றல் இன்றியமையாதது.

வலிமைக்கு மார்க்கம்:— இதில் எளிய நிலைமையை எய்தியுள்ளோர் வலிய நிலைமையை எய்துதற்குரிய வழிகள் விரிவாகவும் தெளிவாகவும் யாவரும் கைக்கொள்ளத் தக்க விதத்தில் கூறப்பட்டுள்ளன. இது விரைவில் வெளிவரும்.

ஒவ்வொன்றின் விலையும் அணா எட்டு. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெறுக.

வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்,
பிரம்பூர், சென்னை.

ஸ்ரீ கிருஷ்ண விலாஸம் பிரஸ், திருமங்கலம்.